கூடுதல் மாவட்ட (விரைவு) நீதிமன்றம், கும்பகோணம்

முன்னிலை. திருமதி. J. ராதிகா, M.A.,M.L.,

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (விரைவு நீதிமன்றம்), கும்பகோணம்

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 - ஆம் நாள் திங்கட்கிழமை

**இ.ம.எண். 1/2023 ன் அ.வ.எண். 14/2017**

1. ராஜலெட்சுமி

2. ராணி

3. வசந்தா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. K. கலியபெருமாள்

2. K. ஜெய்சங்கர்

3. K. மணிகண்டன்

4. சார்பதிவாளர், பாபநாசம்

5. சத்யா

6. மைனர். சந்தோஷ்

7. மைனர். கிஷோர்

(மைனர் மகன்களுக்கு தாயார் மற்றும்
பாதுகாவலர் என்ற முறையில் சத்யா)

8. குமார் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள்

9. மாரியம்மாள்

10. ஜோதி ... புதிய தரப்பினர்கள்

இம்மனுவானது கடந்த 12.10.2023 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 2, 3 மற்றும் 9 ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.த.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும் மற்றும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்கள் மற்றும் எழுத்து மூலமான வாதுரைகளை ஆராய்ந்தறிந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## உத்தரவு

## 2) மனுவின் சுருக்கம்

மனுதாரர் இவ்வழக்கின் 3ம் வாதி. மனுதாரர் 1ம் பிரதிவாதி மீது பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கிடை காலங்களில் 1ம் பிரதிவாதி கலியபெருமாள் இறந்துவிட்டார். மேற்படி இறந்துபோன கலியபெருமாளுக்கு அவரது மனைவி மாரியம்மாள், மகன்கள் மணிகண்டன், விஜய்சங்கர், மகள் ஜோதி ஆகியோர் வாரிசுதாரர்களாக உள்ளனர். மேற்படி விபரங்கள் தனக்கு உரிய காலத்தில் கிடைக்கப்பெறாமல் வாரிசு சேர்க்க வேண்டிய மனுவினை தாக்கல் செய்வதில் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருந்துவிடவில்லை. எனவே, இறந்தபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை அசல்வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கினை நடத்த வேண்டிய விபரங்கள் தனக்கு உரிய காலத்தில் கிடைக்கப்பெறாமல் வாரிசு சேர்க்க வேண்டிய மனு தாக்கல் செய்வதில் சுமார் 243 நாட்கள் காலதாதமாகிவிட்டது. அதனால் வாரிசுகளை சேர்க்கக்கோரும் மனுவினை தாக்கல் செய்வதில் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டு அபேட்மெண்ட் ஆகிவிட்டது. எனவே, இறந்து போனவர்களின் வாரிசுதாரர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பினராக சேர்ந்து வழக்கினை நடத்திட, உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யப்படாமல் ஏற்பட்ட அபேட்மெண்டினை நீக்கறவு செய்து உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3) எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்

மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும். மனுதாரர்கள் வாரிசு சேர்க்க காலதாமதம் என்று கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக கூறப்பட்டுள்ள பொய்யான கற்பனையான சங்கதிகள் ஆகும்.மனுதாரர்களுக்கு உறவினர்கள் என்பதால் அவர்களுடைய வாரிசுகள் தெரிந்தே உரிய காலத்திற்குள் மனுவினை தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள் வேண்டுமென்றே இந்த எதிர்மனுதாரர்களை

அலைக்கழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திடுன் தற்போது இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே, இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டிப்படுகிறது.

4) இம்மனுவில் தீர்வு காண வேண்டிய எழுவினா யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5) இந்த மனுவானது இறந்துபோன முதல் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதற்கு ஏற்பட்ட 243 நாட்கள் காலதாமதத்தினை மன்னித்து உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யப்படாமல் ஏற்பட்ட அபேட்மெண்டை நீக்கறவு செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டு, அது அசல் வழக்கு எண். 14/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்கு பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு எழுவினாக்கள் வனையப்பட்டு, வழக்கு விசாரணைக்கு போடப்பட்டுள்ள நிலையில், கூடுதல் தரப்பினர்களை சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் தரப்பினர்கள் சேர்க்கப்பட்டு பிராதும் திருத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் கூடுதல் எதிர்வழக்குரைக்காக போட்டிருந்த நிலையில், முதல் பிரதிவாதி இறந்தது தெரிவிக்கப்பட்டு காலதாமதமாக இறந்த முதல் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்ப்பதற்கு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கானது பாகம் கோரும் வழக்காக இருப்பதால் முறையாக அனைத்து தரப்பினர்களும் வழக்கில் சேர்க்கப்பட வேண்டியது அவசியமாகும் என்பதாலும், அவ்வாறு சேர்க்கப்படாவிடில் வழக்கு விசாரணை பாதிக்கக்கூடும் என்பதால் மனு அனுமதிக்கத்தக்கது என்றும், எனினும் மிகவும் காலதாமதமாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இம்மனு செலவுத் தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் காண்கிறது.

முடிவில் மனுதாரர்கள் கும்பகோணம் இலவச சட்ட உதவி மையத்தில் ரூ.2000/- செலவுத் தொகையாக செலுத்தி ரசீதை இந்நீதிமன்றத்தில் வரும் 30.10.2023 க்குள் தாக்கல் செய்யும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறினால் மனு தள்ளுபடி செய்யப்படும். அழைக்க 31.10.2023.

இந்த உத்தரவு இன்று என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2023-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16-ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறிய என்னால் பகரப்பட்டது.

ஒப்பம். திருமதி. J. ராதிகா, M.A.,M.L.,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
(விரைவுநீதிமன்றம்), கும்பகோணம்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

ஒப்பம். திருமதி. J. ராதிகா, M.A.,M.L.,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
(விரைவுநீதிமன்றம்), கும்பகோணம்.

/ உண்மைநகல் /
ஒப்பம். திருமதி. J. ராதிகா, M.A.,M.L.,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
(விரைவுநீதிமன்றம்), கும்பகோணம்.